TNKR080008912019

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**

**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**
**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் தேதி வியாழக்கிழமை**

**அசல் வழக்கு எண்.155/2019**

**CNR No.TNKR08-000891-2019**

வீரப்பன் ... வாதி

**/எதிர்/**

1. கலியபெருமாள்
2. தேவி
3. A.மீனாட்சி ... பிரதிவாதிகள்

**தீர்ப்புரை**

வழக்கு சொத்தினை நலந்திகடு கலந்து இரண்டு சமபாகங்களாக பிரித்து, அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், மகசூல் ஆதாயம் கோரியும், தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 28.08.2017–ம் தேதி அன்று ஆவண எண்.1461/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கடந்த 03.12.2018–ம் தேதி அன்று ஆவண எண்.2584/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக் கோரியும், தாவா செலவுத் தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 16.07.2019 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 16.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 16.04.2026 |
| வாதிக்காக | : | திரு.T.பக்ருதீன் – வழக்கறிஞர் |

ஒன்று, இரண்டு பிரதிவாதிகளுக்காக : திரு.R.கிருஷ்ணசாமி – வழக்கறிஞர்
மூன்றாவது பிரதிவாதிக்காக : திரு.V.R.பாலசுப்ரமணியன் – வழக்கறிஞர்

**1) பிராதின் சுருக்கம் :–**

**1 (1)** வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயாரான கன்னியம்மாள் என்பவர் வாதி மற்றும் முதல் பிரதிவாதி இளவர்கள் என்பதால், கார்டியன் என்கின்ற கோதாவில் 13.75 ஏக்கர் பூமியில் 9.50 செண்ட் பூமியை ஒரு தேவகவுண்டர் என்பவரிடமிருந்து கடந்த 04.05.1979–ம் தேதி அன்று சரியான பிரதி பிரயோஜனத்தின் பேரிலும், பின்னிட்டு கடந்த 14.05.1979–ம் தேதி அன்று மீதமுள்ள பூமியை மேற்படி தேவகவுண்டரிடமிருந்து 4 ஏக்கர் 25 செண்ட் பூமியையும் கிரையம் பெற்று, வாதி மற்றும் முதல் பிரதிவாதி உரிமை வயதை எட்டும் வரை பாதுகாவலராக இருந்து வழக்கு சொத்தை அனுபவம் செய்து வந்துள்ளார். வாதி மற்றும் முதல் பிரதிவாதி உரிமை வயதை எட்டிய பின்னர் கூட்டு பங்கு உரிமையாளர் என்கின்ற கோதாவில் மேற்படியார்கள் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வந்த நிலையில், முதல் பிரதிவாதியானவர் அவரது மனைவியான இரண்டாவது பிரதிவாதிக்கு கடந்த 28.08.2017–ம் தேதி அன்று வழக்கு சொத்தானது பாகம் பிரிக்கப்படாத நிலையில், 6 ஏக்கர் 87–1/2 செண்ட் பூமியை தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சொத்தினை ஒப்படைவு செய்துள்ளார்.

**1 (2)** வழக்கு சொத்தின் பட்டா வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் பெயரிலேயே உள்ளது. முதல் பிரதிவாதியால் பிறப்பித்துக்கொடுத்ததாக கூறக்கூடிய தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் குறித்து வாதியானவர் கரூர் நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்துள்ளார். கடந்த 28.08.2017–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் இரண்டாவது பிரதிவாதியானவர் கடந்த 03.12.2018–ம் தேதி அன்று மூன்றாவது பிரதிவாதிக்கு பிரிக்கப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார். வழக்கு சொத்தை பொறுத்து வாங்குமுன்னுரிமை வாதிக்கே உள்ளது.

**1(3)** கரூர் மாவட்டம், கடவூர் தாலூகா, வெள்ளப்பட்டி கிராமத்தில் பட்டா எண்.1257, 1508, 1500, 1499, 1467, 1427, 1421, 1101, 590, 601, 544, 213, 1579 ஆகிய பட்டாக்களில் உள்ள சொத்துக்களில் வாதி, முதல் பிரதிவாதி மற்றும் அவரின் மூன்று சகோதரிகளுக்கு உரிமை உள்ளது. மேற்படி சொத்தில் வாதிக்கு ஐந்தில் ஒரு பாக உரிமை உள்ளது. மேற்படி சொத்தை பொறுத்து வாதி பாகப்பிரிவினை கோருவதற்கு உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு கட்டளை 2 விதி 3–ன் கீழ் மனு தாக்கல் செய்ய உரிமையை தக்க வைத்துக்கொள்கிறார். வழக்கு சொத்தானது நாளது தேதி வரை பாகம் பிரிக்கப்படவில்லை என்பதால், வழக்கு சொத்தினை நலந்திகடு கலந்து இரண்டு சமபாகங்களாக பிரித்து, அதில் ஒரு பாகத்தினை வாதிக்கு ஒதுக்கீடு செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கோரியும், மகசூல் ஆதாயம் கோரியும், தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 28.08.2017–ம் தேதி அன்று ஆவண எண்.1461/2017 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கடந்த 03.12.2018–ம் தேதி அன்று ஆவண எண்.2584/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என விளம்புகை செய்யக் கோரியும், தாவா செலவுத் தொகைக்காகவும் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) ஒன்று, இரண்டு பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**

வாதியின் வழக்கானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. வழக்கு சொத்தினை பொறுத்து வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் முன்னிலையில் கடந்த 2015–ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட, மேற்படி வாய்மொழி பாகத்தில் ச.எண்.294/1 பூமியில் 6.87–1/2 செண்ட் பூமி மேற்கு புறத்தில் முதல் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட, அதனடிப்படையில் தென்வடலாக வழக்கு சொத்தினை பிரிக்கும் வகையில், வரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு பகுதி வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், முதல் பிரதிவாதி மேற்படி சொத்தை அனுபவம் செய்து வருகிறார்.

கடந்த 28.08.2017–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்த சங்கதி, அதனடிப்படையில் கடந்த 03.12.2018–ம் தேதி அன்று மூன்றாவது பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சங்கதி உண்மை. வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் மற்றும் சகோதரிகளை வழக்கில் சேர்க்கில்லை. அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது. வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதால், வாதியின் வழக்கினை ஒன்று, இரண்டு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்கள்.

**3) மூன்றாவது பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–**

வாதியின் வழக்கானது சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. வழக்கு சொத்தினை பொறுத்து வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் முன்னிலையில் கடந்த 2015–ம் ஆண்டு வாக்கில் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட, மேற்படி வாய்மொழி பாகத்தில் ச.எண்.294/1 பூமியில் 6.87–1/2 செண்ட் பூமி மேற்கு புறத்தில் முதல் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட, அதனடிப்படையில் தென்வடலாக வழக்கு சொத்தினை பிரிக்கும் வகையில், வரப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு பகுதி வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், முதல் பிரதிவாதி மேற்படி சொத்தை அனுபவம் செய்து வருகிறார். கடந்த 28.08.2017–ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொடுத்ததன் அடிப்படையில், கடந்த 03.12.2018–ம் தேதி அன்று மூன்றாவது பிரதிவாதியானவர், இரண்டாவது பிரதிவாதியிடமிருந்து தகுந்த பிரதி பிரயோஜனத்தின் பேரில் கிரையம் பெற்று, ஆண்டு அனுபவம் செய்து வருகிறார். வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் மற்றும் சகோதரிகளை வழக்கில் சேர்க்கில்லை. அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் வழக்கானது காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதால்,

வாதியின் வழக்கினை ஒன்று, இரண்டு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**4) வழக்குரை, எதிர்வழக்குரை வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது.**

1 Whether suit property was already orally partition in the year of 2015 is True?

2 Whether plaintiff is entitled to get preliminary decree in respect of 1/2 share of the suit property?

3 Whether plaintiff is entitled to get declaration that settlement deed 1461/17 is null and void?

4 Whether plaintiff is entitled to get declaration that sale deed No.2584/17 is null and void?

5 Whether plaintiff is entitled to get future mesne profits of the suit property?

6 What other relief's are entitled to get plaintiff?

**5)** வாதி தரப்பில், வாதி வீரப்பன் என்பவர் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு துரைசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.6 ஆவணம் குறியீடு செய்யபப்ட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், முதல் பிரதிவாதி கலியபெருமாள், பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மூன்றாவது பிரதிவாதி மீனாட்சி பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக பி.வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபித்துள்ளதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

7) பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதி அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், வாதியின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8) ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகள் :–**

தரப்பினர்களின் உறவுமுறை குறித்த சங்கதி, வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் கடந்த 04.05.1979 மற்றும் 14.05.1979 தேதிகளில் கார்டியன் என்கின்ற கோதாவில் ச.எண்.294/1–ல் கண்டுள்ள பூமியை கிரையம் பெற்ற சங்கதி, முதல் பிரதிவாதியானவர் கடந்த 28.08.2017–ம் தேதி இரண்டாவது பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் மூலம் சொத்தினை ஒப்படைவு செய்துள்ளார் சங்கதி, இரண்டாவது பிரதிவாதியானவர் கடந்த 03.12.2018–ம் தேதி அன்று மூன்றாவது பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த சங்கதி ஆகியவைகளை தரப்பினர்கள் ஒப்புக்கொண்டுள்ளபடியால், மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளை விவாதிக்க வேண்டியதில்லை.

**9) எழுவினா ஒன்றிற்கான தீர்வு :–**

(*1*) *Whether suit property was already orally partition in the year of 2015 is True?*

**9 (1)** வாதி அவரது வழக்குரையில், வழக்கு சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை கோரியுள்ள நிலையில், முதல் பிரதிவாதி தரப்பில் மேற்படி வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்கனவே வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டதாக எதிர்வாதம் புரியப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை பொறுத்து பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில், வழக்கு சொத்தினை பொறுத்து 2015–ம் ஆண்டு வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் முன்னிலையில் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டுவிட்டதாகவும், அதனடிப்படையில் வாதிக்கு சொத்தின் கிழக்கு புறத்திலும், முதல் பிரதிவாதிக்கு மேற்கு புறத்திலும் பாகம் ஒதுக்கப்பட்டதாகவும், அதனடிப்படையில் மேற்படி சொத்தினை முதல் பிரதிவாதி அனுபவம் செய்து வந்ததாக கூறப்பட்டுள்ளது.

9 (2) முதல் பிரதிவாதி தரப்பில், வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் முன்னிலையில் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டுள்ளதாக முதல்நிலை அனுமானத்தை முதல் பிரதிவாதி எடுத்துள்ள நிலையில், முதல் பிரதிவாதி கூறுவது போன்று வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் முன்னிலையில் பாகம் பிரிக்கப்படவில்லை என்கின்ற சங்கதியை நிரூபிக்க வேண்டிய சுமையானது வாதியை சார்ந்தது. அவ்விதத்தில், வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"முதல் பிரதிவாதி எனது சகோதரர், இரண்டாவது பிரதிவாதி, முதல் பிரதிவாதியின் மனைவி, எனது தாயார் பெயர் கன்னியம்மாள். அவர் தற்பொழுது உயிருடன் உள்ளார்"*** என கூறியுள்ளார். மேலும், பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"வாய்மொழியாக பாகம் ஏற்பட்ட பொழுது யாராவது இருந்தார்களா என்றால் எனது அப்பா, அம்மா மற்றும் வாதியும் இருந்தார்கள்"*** என கூறியுள்ளார். வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயார் உயிருடன் உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில், வாதியானவர், முதல் பிரதிவாதி கூறுவது போன்று வாய்மொழி பாகம் பிரிக்கப்படவில்லை என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்வதற்கு மேற்படி வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தாயாரை சாட்சியாக விசாரிக்கவில்லை. அவ்வாறு சாட்சியாக விசாரிக்காததற்கான காரணத்தினையும் வெளிப்படுத்தவில்லை. வாதி தரப்பில் மேற்படி வாதியின் தாயாரை சாட்சியாக விசாரணை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளாதது வாதிக்கு எதிரான அனுமானத்தை உருவாக்குகிறது.

9 (3) வாதி தரப்பில் வழக்கு சொத்தைப் பொறுத்து பாகம் பிரிக்கப்படவில்லை என்கின்ற வாதத்தை முன்னிறுத்தியுள்ள நிலையில், பி.வா.சா.1–னிடம் கீழ்க்கண்டவாறு வினா எழுப்பப்பட்டுள்ளது. அதாவது, பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"நான் மேற்படி சொத்தை ரூ.3,00,000/– சொன்னேன் எனது தம்பி ரூ.50,000/–த்திற்கு கேட்டார் விலை கட்டுபடியாகவில்லை என்பதால் நான் மூன்றாவது நபருக்கு விற்றுவிட்டேன்"*** என கூறியுள்ளார். வாதி கூறுவது போன்று வாய்மொழியாக பாகம் பிரிக்கப்படவில்லை என்ற நிலைபாட்டில் இருந்துள்ள நிலையில், முதல் பிரதிவாதியிடம் அவருக்குரிய பாகத்தினை வாதி கிரையம் பெறுவதற்கு ஏன் முயற்சி மேற்கொண்டார் என்பதற்கு எவ்வித விளக்கத்தினையும் வாதி தரப்பில் தெரிவிக்கவில்லை. வாதி கூறுவது போன்று சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்திருந்தால் மட்டுமே முதல் பிரதிவாதியிடம்

வாதியானவர் சொத்தை கிரையம் பெறுவதற்கு முயன்றுள்ளார் என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**9 (4)** வழக்கு சொத்தை தவிர்த்து வேறு சில வழக்கு சொத்துக்களையும் பாகம் பிரிக்கப்படவில்லை என்கின்ற சங்கதியை பொறுத்து வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டப்பிரிவு கட்டளை 2 விதி 3–யின் கீழ் மனு தாக்கல் செய்து வாதியானவர் இந்நீதிமன்றத்தில் உத்தரவு பெற்றுள்ளதால், மேற்படி சங்கதி பொறுத்து விவாதிக்க வேண்டியதில்லை,

**9 (5)** வழக்கு சொத்தை பொறுத்து வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு இடையே பாகம் பிரிக்கப்படவில்லை என்கின்ற சங்கதியை வாதி தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை. இவ்வாறாக, எழுவினா ஒன்றிற்கு விடை காணப்படுகிறது.

**10) எழுவினா இரண்டு முதல் நான்கிற்கான தீர்வுகள் :–**

*(2) Whether plaintiff is entitled to get preliminary decree in respect of 1/2 share of the suit property?*

*(3) Whether plaintiff is entitled to get declaration that settlement deed 1461/17 is null and void?*

*(4) Whether plaintiff is entitled to get declaration that sale deed No.2584/17 is null and void?*

முதல் எழுவினாவானது வாதிக்கு எதிராக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், வழக்கு சொத்தை பொறுத்து ஏற்கனவே வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் பாகம் நடைபெற்றுவிட்டது என இந்நீதிமன்றம் முடிவுக்கு வந்துள்ளபடியாலும், முதல் பிரதிவாதியால், இரண்டாவது பிரதிவாதிக்கு கடந்த 28.08.2017–ம் தேதி அன்று தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் (ஆவண எண்.1461/2017) மற்றும் இரண்டாவது பிரதிவாதியால் மூன்றாவது பிரதிவாதிக்கு கடந்த 03.12.2018–ம் தேதி அன்று தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த கிரைய ஆவணத்தை (ஆவண எண்.2584/2018)

பற்றியும் வினா எழுப்புவதற்கு வாதிக்கு எவ்வித உரிமை இல்லை. எனவே, மேற்படி எழுவினாக்களுக்கு விடை அளிக்க வேண்டியதில்லை.

**11) எழுவினா ஐந்திற்கான தீர்வு :–**

*(5) Whether plaintiff is entitled to get future mesne profits of the suit property?*

ஒன்று முதல் நான்கு எழுவினாக்கள் வாதிக்கு எதிராக முடிவு செய்யப்பட்டுள்ளதால், வாதிக்கு மகசூல் ஆதாயம் பெறுவதற்கு உரிமை இல்லை. இவ்வாறாக, எழுவினா ஐந்திற்கு விடை காணப்படுகிறது.

**12) எழுவினா ஆறிற்கான தீர்வு :–**

*(6) What other relief's are entitled to get plaintiff?*

ஒன்று முதல் ஐந்து எழுவினாக்கள் வாதிக்கு எதிராக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் வழக்கின் செலவுத் தொகையினை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறாக, எழுவினா நான்கிற்கு தீர்வு காணப்படுகிறது.

**13) முடிவாக,**

**(அ)** வாதியின் வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**(ஆ)** செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.16 16:26:18 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதி தரப்பு சாட்சி :–**

வா.சா.1 – வீரப்பன் (வாதி)

வா.சா.2 – துரைசாமி

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.05.1979 | கிரையப்பத்திரம் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.2 | 14.05.1979 | கிரையப்பத்திரம் |
| வா.சா.ஆ.3 | 28.08.2017 | செட்டில்மெண்ட் பத்திரம் |
| வா.சா.ஆ.4 | 03.12.2018 | கிரையப்பத்திரம் |
| வா.சா.ஆ.5 | | பட்டா எண்.1257–க்குரிய கூட்டுப்பட்டா |
| வா.சா.ஆ.6 | | வா.சா.2–ன் ஆதார் அட்டை நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

பி.வா.சா.1 – கலியபெருமாள் (முதல் பிரதிவாதி)

பி.வா.சா.2 – மீனாட்சி (மூன்றாவது பிரதிவாதி)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 28.08.2017 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் |
| பி.வா.சா.ஆ.2 | 03.12.2018 | கிரையப்பத்திரம் |
| பி.வா.சா.ஆ.3 | | பட்டா எண்.1257–க்குரிய கூட்டுப்பட்டா |
| பி.வா.சா.ஆ.4 | | ச.எண்.294/1–க்குரிய புலவரைபடம் |
| பி.வா.சா.ஆ.5 | | வில்லங்க சான்றிதழ் |

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.04.16 16:26:22 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.